2018 ஜூன் 14]

பிரச்சினையும் இல்லாமல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த திட்டக்குடி பகுதியில், இருக்கின்ற பெண்ணாடம் பேரூராட்சியின் ஒரு பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவையென்றால், நெல் வரத்தைக் கருத்திற்கொண்டு, அவர்கள் சொல்கிற ஊர்களில் நெல் வரத்து இருக்குமேயானால், உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டு, உடனடியாகத் திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

பின்னலாடை விற்பனை மையம்

***6390—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடை விற்பனை மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்றிருந்த பனியன் தொழிலைக் காப்பாற்றி, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியும், சாய சலவைப் பட்டறைகளுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.200 கோடியைத் தந்து, பனியன் தொழிலையும் தொழிலாளர்களையும் காப்பாற்றிய காவல் தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

முற்பகல் 10–55

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வகையிலே, புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்க நிதியை ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் கொங்கு நாட்டுத் தங்கம் அண்ணன் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அவருக்குத் துணை நிற்கும் தென்பாண்டிச் சிங்கம் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். எனது மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மழைநீர் சேமிப்புத் திட்டம் எனும் மகத்தான திட்டம் தந்த, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 ஊராட்சிகளையும் உள்ளடக்கி ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்குரிய அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இப்பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில் வெளிநாடுகளுக்கு பனியன் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும், உள்நாட்டு பனியன் தயாரிப்பு செய்யும் நிறுவனங்களும், இரண்டாம் ரக பனியன் மற்றும் கார்மன்ட்ஸ்

2018 ஜூன் 14]

ஆடை ரகங்களைத் தயார் செய்யும் நிறுவனங்களும் அதிகமாக உள்ளன. இதில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வகையிலே, வெளிநாட்டு ஏற்றுமதி ரக பனியன் உற்பத்தியும், சுமார் 10,000 கோடி ரூபாய்க்கு உள்நாட்டுத் தேவைக்கான பனியன் உற்பத்தியும் செய்யப்படுகிறது. சுமார் 30,000 கோடி ரூபாய் மதிப்பிலான பனியன் வர்த்தகம் நடைபெறுகிறது. இங்கு தயாரிக்கப்படும் உள்நாட்டு பனியன்களை விற்பனை செய்வதற்குரிய சந்தை மையம் இல்லாத காரணத்தினால் தனித் தனியாக வெவ்வேறு மாவட்டங்களுக்குச் சென்று விற்பனை செய்யும் சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, இங்கு உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் ரக பனியன்களை மற்றும் இரண்டாம் தர பனியன்களை முழுமையாக விற்பனை செய்ய இயலவில்லை. நியாயமான விலை கிடைக்காததால் தொழிலும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருப்பூர் மக்களின் நலன் கருதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க.நா. விஜயகுமார், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *திருப்பூர் வடக்கு தொகுதியில் பனியன்களை விற்பனை செய்யும் சந்தை மையம் ஒன்றை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழில் ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க தொழிலாகத் திகழ்ந்து வருகிறது. இங்கு உற்பத்தியாகும் துணி உள்நாட்டிலும் விற்பனை செய்யப்படுகிறது. வெளிநாட்டிற்கும் ஏற்றுமதியாகிறது. அங்கு கிட்டத்தட்ட 34,000 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடைபெற்று வருகிறது.*

இது முற்றிலும் தனியார் செய்யக்கூடிய ஒரு தொழிலாகும். இந்தத் தொழில் அரசு அல்லது கூட்டுறவுத் துறை என்பதில்லாமல், தொடர்பே இல்லாத ஒரு தொழிலாக இருக்கிறது. எங்கள் துறைக்கோ, கூட்டுறவுச் சங்கங்களுக்குக்கோ தொடர்பு இல்லாத

ஒரு தொழிலாக இருந்தபோதிலும்கூட, திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து மாவட்ட நிருவாகத்தின்மூலம் ஒரு விற்பனை வளாகம் அமைப்பதற்கு கருத்துரு ஒன்றினை அனுப்பி வைத்தால், அதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், கேள்வி இருக்கிறதா? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில் சுத்திகரிப்பு நிலையத்துடன்கூடிய பனியன் நூல் சாயமிடும் தொழிற்சாலை அமைத்திட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக நடைபெற்று வருகிற திருப்பூர் பின்னலாடை, ஆயத்த ஆடை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சாயக் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்வதற்காக மத்திய, மாநில அரசுகள் ரூ.703 கோடி அளவிற்கு கடனுதவி மற்றும் மானியம் கொடுத்து, 18 சுத்திகரிப்பு ஆலைகளை சிறப்பாக அங்கே நிறுவி, பாதுகாப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.*

சுத்திகரிப்பு நிலையங்கள் மேலும் தேவையென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவாரேயானால், அதுகுறித்த கருத்துரு மாவட்ட நிருவாகத்தின் சார்பாக அரசுக்கு வரப்பெறுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.